DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.65/2022

Prosecution witness – PW 6

| | | |
|---|---|---|
| Name | : திரு.சத்தியமூர்த்தி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A2 to A4 present. A1 absent. Petition u/s.31 Cr.P.C filed and allowed. )

17.02.2026 at 01.20 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ஏர்வாடி தர்ஹா காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2020 ஆம் ஆண்டு சிக்கல் காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்தேன்.

2. கடந்த 24.12.2020 ம் தேதியன்று இரவு 11.55 மணிக்கு நானும், காவலர் 1162 – திரு.ராஜா ஆகியோர் நிலையப்பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா இரவு ரோந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது சிக்கல் பஜார் அருகே எதிரி செல்லத்துரை மற்றும் வடிவேல் பிளக்ஸ் போர்டை வைத்து ஒட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது சார்பு ஆய்வாளர் பிளக்ஸ் போர்டை வைக்கக்கூடாது என மாண்புமிகு உயர்நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க பட்டுள்ளது என கூறி அந்த பிளக்ஸ் போர்டை அந்த இடத்திலிருந்து அகற்ற சொன்னார்கள் .

3. அப்போது எதிரி செல்லத்துரை நான் ரவுடி யேசுதாசின் மகன் நாளைக்கு ஸ்டேசனில் வந்து என்ன செய்கிறேன் பார் என்று கூறிவிட்டு பிளக்ஸ் போர்டை கழட்டி விட்டு சென்று விட்டார்கள். மறுநாள் எதிரி யேசுதாஸ் அவருடைய மகன்கள் செல்லத்துரை, சகேயு மற்றும் வடிவேல் ஆகியோர் காவல் நிலையத்தில் வந்து பிரச்சனை செய்ததாக கேள்விபட்டேன். இது சம்மந்தமாக அன்றைய தினம் சிக்கல் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பாக இருந்த ஏர்வாடி காவல் நிலைய ஆய்வாளர் திரு.சாமிநாதன் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் என்னை 25.12.2020ம் தேதி இரவு

09.00 மணியளவில் சிக்கல் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில்கூறிய விவரங்களை தான் ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் காவல் நிலையத்தில் வந்து பிரச்சனை செய்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவலர் ராஜா மூலமாக தெரிந்து கொண்டேன்.

நான் 24.12.2020ம் தேதி சார்பு ஆய்வாளருடன் ரோந்து சென்ற போது எதிரிகள் செல்லத்துரை மற்றும் வடிவேல் பிளக்ஸ் போர்டை தரையில் வைத்து ஒட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த பிளக்ஸ் போர்டில் என்ன விளம்பரங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ்திற்கு வாழ்த்து தெரிவித்து எழுதப்பட்டிருந்தது. சிக்கல் பஜார் என்பது சுமார் 100 மீட்டர துூரம் இருக்கும் என்றால் சரிதான். பிளக்ஸ் போர்டானது சிக்கலிலிருந்து தேரிருவேலி பிரியும் விலக்கு ரோட்டில் வைக்கப்பட்டிருந்தது. பிளக்ஸ் போர்டை எதிரிகளிடமிருந்து கைப்பற்றுவதற்கு நாங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் நாங்கள் சொன்ன உடனேயே எதிரிகள் அதை எடுத்து சென்று விட்டார்கள்.

சிக்கலுக்கும், தேரிருவேலிக்கும் இ.சி. ஆர் ரோடு உள்ளதா என்றால் இல்லை. பிளக்ஸ் போர்டானது இ.சி.ஆர் விலக்கு ரோட்டில் வைக்கப்டபட்டிருந்தது சார்பு ஆய்வாளர் 24ம் தேதி நடந்த சம்பவத்திற்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த திருமதி.சாரதா அவர்கள் என்றால் சரிதான். அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 24ம்தேதி நான் செல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி